பூரணமேயற்புதமேபொங்குகருணைக்கடலே ... *
சாரமேயென்றனருட்கண்ணே ரகுமானே ... (௬௮)

ஒபாதோவென்கவலைபுன்னருளாலெங்கருவி .... *
காயாதோவைடாவென்கண்ணே ரகுமானே ... ... (௬௯)

ராஜாங்கம்வேண்டிரதகஜதுரகமேறுதற்குக் ... ... *
காசெங்குங்கேளனென்கண்ணே ரகுமானே ... (௭௰)

தந்தைதாயென்றேதயங்குகின்றபாவிமனக் .... *
கண்டிறக்கவந்தருள்செய்கண்ணே ரகுமானே ... (௭௧)

அச்சமெமக்கில்லையெனவைம்புலனென்பாழ்மனத்தைக் *
கைச்சூறையாடிவிடேன்கண்ணே ரகுமானே ... (௭௨)

இனியவமிர்தம்பொங்கியெங்குங்களாதத்திவரக் ... ... *
கனிவாய்திறந்தருள்செய்கண்ணே ரகுமானே ... (௭௩)

ஆணையிட்டேனுணையிட்டேனையனேயுன்னருளைக் ..... *
காணவெனக்கருள்செய்கண்ணே ரகுமானே ... (௭௪)

அல்லும்பகலுமறிவிலயமாயவர்க்குக் .. .. *
மெல்லும்பிளந்திடுமென்கண்ணே ரகுமானே ... (௭௫)

புவியுமெழுவானும்பொன்னுலகும்பல்லுயிரும் — — — *
கவியுந்திருக்கருணைக்கண்ணே றகுமானே — — —(௭௬)

எண்ணரியதாகவிருந்தாயிஞ்சூத்திரமோ— — — — —*
கண்ணிலொளிபாய்ந்ததுவோகண்ணே றகுமானே — —(௭௭)

உள்ளேபோவழுக்கோவென்னுள்ளங்கழுவக்— — — —*
கழுவாத்துடக்கோவென்கண்ணே றகுமானே .. .. (௭௮)

உற்றவிளைத்திரையுறவின்றுறைத்திரையுங் ... . *
கத்தரித்துவிட்டருள்செய்கண்ணே றகுமானே ... ... (௭௯)

நற்பவழக்கொம்பேநவமணிக்குமற்புதமே ... ... *
கைப்பொருட்குமெய்ப்பொருளேகண்ணே றகுமானே ...(௮௰)

ஒப்பாவுகப்பியுணர்வற்றனைகைவிட்டுக்... ... ...*
கப்பலைகைக்கொண்டோமெனக்கண்ணே றகுமானே ... (௮௧)

பசப்பிப்பணம்பறிக்கும்பாவிக்குருமுகத்தைக் ... ...*
கசப்பாகக்கண்டேனென்கண்ணே றகுமானே ... .(௮௨)

வேதியர்க்குமாதவர்க்குமெய்யடியார்கட்குமுனைக் ... ...*
காதலிப்பெருக்குமருள்கண்ணே றகுமானே .. ..(௮௩)

வேளைவேரோடறுத்துமெய்யடிமையாக்குதற்கென் ... *
காரியத்திற்றுமதமென்கண்ணே றகுமானே .... (௮௪)

பழகப்பழகிவரும்பாக்கியத்தைப்பெறுதலைக்... ... ...*
குளவுகொடுக்கேனென்கண்ணே றகுமானே ... ... (௮௫)

நாமான்மைகண்முழுதுநாசமாக்கர்தமக்குங் ... . *
காமவினைபோமோவென்கண்ணே றகுமானே... ... ...(௮௬)

அடிமையுனதபயமாகாதிருக்கினுமென் ... ...*
கடைவழிக்குங்கட்டூதேகண்ணே றகுமானே ... ...(௮௭)

வேதாந்தவேதமெல்லாம்விட்டேதியேகடந்து ... ...*
கர்தலித்துநின்றேனென்கண்ணே றகுமானே— — —(௮௮)

இனமுமஞ்சனமுமெனவெண்ணியெண்ணியுன்னடிமை— —*
கனசழக்குப்பட்டேனென்கண்ணே றகுமானே — —(௮௯)

நவகுத்திரத்தைவிடடுநல்வினைவென்றுதுமனங்.. ... ...*
கவலைப்படுவதென்னகண்ணே றகுமானே— ....(௯௰)

மடிப்புங்கொலைகளவும்வஞ்சமுமென்னெஞ்சைவிட்டுக் ... ... *
கடக்கநடப்பதில்லைகண்ணே ரகுமானே ... .(௯௧)

பலவிடத்தைச்சுற்றிப்பாதவித்துப்பார்விமனங் ... . *
கலங்கிமலங்குவதென்கண்ணே ரகுமானே ... ...(௯௨)

உள்ளக்கருத்தாலுவந்துறவுகொள்ளாமற் ... ... *
கள்ளமனந்துள்ளுவதென்கண்ணே ரகுமானே ... ... (௯௩)

மண்ணாமுதன்மற்றமயக்கமறக்கல்லாரை ... ... *
கண்ணெடுத்துப்பாரேனென்கண்ணே ரகுமானே ... ...(௯௪)

தேசிகநாமென்னுந்திருட்டுக்குருக்கள்சொல்லோர் ... .. *
காசாட்மதியலெனகண்ணே ரகுமானே ... ... (௯௫)

தன்னையறிந்துதவப்புரியாத்தன்மையினாற் .. .. *
கன்னெஞ்சனானென்கண்ணே ரகுமானே — — —(௯௬)

மாடகூடங்கண்மணிமண்டபமுமன்றுசனுங் ... ... *
காடுகொள்ளக்கண்டேனென்கண்ணே ரகுமானே ... ... (௯௭)

கூரனெரியவேகதறிச்சுட்பிடினுங்காணக் ... . *
கருவேகுருவேயென்கண்ணே ரகுமானே ... ... (௯௮)

மருளாத்தவத்தான்மறப்புநினைப்பற்றவர்க்குக் ... ... *
கருணைக்குணங்குடியாங்கண்ணே ரகுமானே ... ...(௯௯)

உதிக்குமுணர்வின்றியுணர்வோடுணர்வொன்றிற் ... ... *
கதிக்குங்குணங்குடியென்கண்ணே ரகுமானே ... .(௱)

ரகுமான்கண்ணி - முற்றிற்று

(ஆக திருப்பாடல் ௭௱௯௫

புலம்பற்கண்ணி

முத்திதருவித்தைமுனையில்வைத்துச்சீராட்டி ... ... *
நித்தமறவாமணியினைப்பதினியெக்காலம் ... ...(௧)

ஆசியின்மேலாசையடர்ந்தெரிந்தவக்கினியின் ... ... *
சோதியினால்வெந்துசுகம்பெருவதெக்காலம் .... (௨)

காமக்கடல்கடக்கக்கரத்தவியக்கப்பல்வைத்து .... *
நேமநிஷ்டைத்தம்பநிறுத்துவதுமெக்காலம் ... ...(௩)

பங்கப்பழிப்பேதிறைந்தபையன்யான்றையவர்கள் ... ... *
கொங்கையைநான்பாராக்குருடாவதெக்காலம் ... ... (௪)

கொங்கைதனைப்பாராக்குருடாயிருப்பதுடன் ... ... *
அங்கமுமிழ்மோகமழிவதினியெக்காலம் ... ... (௫)

அங்கமுமிழ்மோகமழிந்தேயறமெலிந்து ... ... *
வங்கிழடுபோலவறண்டுணர்வதெக்காலம் ... ... (௬)

வாசியினுனேறிவலமிடந்தான்திருப்பாமற் ... ... *
றேசிநடைபோலத்திடப்படுவதெக்காலம் ... ... (௭)

தேசிநடைபோலத்தியங்காச்சுழிமுனையை ... ... *
நாசிநுனியிலதைநான்மறிப்பதெக்காலம் ... ...(௮)

நாசிநுனிகடந்துநாசமாய்ப்போகாமல் ... ... *
வாசிபுமென்கையில்வசப்படுவதெக்காலம் ... ... (௯)

மையலென்னுமாலைமார்புநிறையப்பூண்ட ... ... *
தையலர்களெல்லார்மென்ருபாவதெக்காலம் — — — —(௰)

கஞ்சாவபினிரக்குங்கந்பமெனவுண்ணாமல் ... ... *
எஞ்சான்பனங்களிறக்கியுண்பதெக்காலம் — ... (௰௧)

பொய்யெமிகுத்தபுகர்ப்பாவிப்பையல்யான் ... ... *
அய்யோவென்றேடமுதுன்னடிபணிவதெக்காலம் ... (௰௨)

அய்யாகூவென்னவலறவடியுன்வன்றன் ... ... *
பொய்யானமெய்யின்பிழைப்பறுவதெக்காலம் ... ... (௰௩)

மருவுதகைமறந்துமணமுமதமிறந்து — — — *
இருங்கையுமேந்தியிரந்துண்பதெக்காலம் — — (௰௪)

இருகையுமேந்தியிரந்துகுடிந்தேறான் — — — *
சருகாயுலர்ந்துசலிப்பறுவதெக்காலம் — — — (௰௫)

ஆசானைக்காலாடணைத்திழுத்துமோந்துகலந் — — *
தாசாடிப்பேசியுணர்வருள்வதெக்காலம் — — (௰௬)

வாசிவாவென்றுவருந்தெள்ளமுதமுண்டு — — — *
பேசிநான்வாழ்ந்தேபிழைதீர்வதெக்காலம் — — (௰௭)

புலம்பற்கண்ணி - மூற்றிற்று

ஆகதிருப்பாடல்-௭௱௮௰

உ

கண்மணிமாலைக்கண்ணி.

அத்துவிதமேபரிவகண்டிதாகாரக் — — *
கர்த்தவியமேயென்கண்ணேபராபரமே — — (க)

தற்பரமேசிற்பரமேதானென்றுநின்றாவுங் — *
கற்பகமேயற்புதமேகண்ணேபராபரமே — (உ)

உடலேயுயிரேயுளங்குளிர்ந்தசெந்தேங் — ... *
கடலேநிறையமுதேகண்ணேபராபரமே — (ங)

கொட்டிவைத்தமுத்தேகுவித்தநவரத்தினமே — —*
கட்டிப்பசும்பொன்னேயென்கண்ணேபராபரமே ... (ச)

சட்டரசவர்க்கமேசார்ந்தோர்க்குச்சந்தனமே — *
கட்டழகுப்பெண்ணேயென்கண்ணேபராபரமே — —(ரு)

செல்வப்பெருக்கேதிரண்டமணிபொக்கிஷமே — ... *
கல்விக்களஞ்சியமேகண்ணேபராபரமே — —(சா)

இன்னமுதேகண்டேயெனக்கேற்றமுக்கனியே — *
கன்னலரும்பாகேயென்கண்ணேபராபரமே — (எ)

பீச்சாத்திரண்டமுதேபிரியசப்பெருவாழ்வே — *
காய்ச்சாச்செம்பொன்னேயென்கண்ணேபராபரமே — —(அ)

நற்பவளக்கொம்பேநவின்றமணிப்பெட்டகமே — ...*
கைப்பொருட்குமெய்ப்பொருளேகண்ணேபராபரமே — (கூ)

பட்டைக்கரும்புவட்டேபானைகொண்டசர்க்கரையே — —*
கட்டிக்கரும்பேயென்கண்ணேபராபரமே — (ய)

அற்பக்கடலைத்தொலைத்தோர்இளைதீர்க்கும் — *
கம்பமற்றபாற்கடலேகண்ணேபராபரமே — (யக)

பொய்ப்பொருள்களெல்லாம்புறக்களித்தபுண்ணியர்தம் — —*
கைப்பொருள்சித்தேயென்கண்ணேபராபரமே — —(யஉ)

பவக்கடலைநீக்கிப்பரிவாய்க்கரையேற்றுங் — — *
கவிழாமரக்கலமேகண்ணேபராபரமே — ..(யங)

தம்பனங்கொண்டேதரித்துநின்றவோங்காரக் — *
கம்பத்தடியானேயென்கண்ணேபராபரமே — (யச)

ஸ்ரீகுரு மஸ்தானசாகிபு அவர்கள்பாடல்

மலிநாதல்கொண்டகையான்மண்ணிற்கவிழ்ப்பதற்கோ *
கலகம்விளைத்துவிட்டாய்கண்ணேபராபரமே (௰௫)
தெள்ளியவான்சோதிதெளிந்துமெல்லவந்ததையுங் *
கள்ளப்படுத்திவிட்டாய்கண்ணேபராபரமே (௰௬)
புண்ணியொழிகிப்புழுங்குமனத்தினர்போற் *
கண்ணீர்கலங்கவிட்டாய்கண்ணேபராபரமே (௰௭)
பித்தர்கள்போலும்பிதற்றிக்காகம்போலுஞ் *
சத்திகத்திச்சாகவிட்டாய்கண்ணேபராபரமே (௰௮)
போற்றுமந்திரீசைபொருதுசுமர்க்காற்றுமற் *
காற்றுப்பறக்கவிட்டாய்கண்ணேபராபரமே (௰௯)
நெருப்பதற்கேயொப்பாகநிற்பதற்கோவென்றலையிற் *
கற்பித்துவிட்டுவிட்டாய்கண்ணேபராபரமே (௨௰)
சொல்லுஞ்சுபஞ்சோதிச்சுடர்கொழித்தநெஞ்சகருங் *
கல்லாக்கச்செய்துவிட்டாய்கண்ணேபராபரமே (௨௧)
அவிழ்ந்தவிழ்ந்துசிந்தையுன்மீதாசைவைத்ததனையுங் *
கவிழ்ந்துப்பாழ க்கிவிட்டாய்கண்ணேபராபரமே (௨௨)
ஓசைமணிமண்டபத்தினுட்புகாவண்ணமெனைக் *
காசினியிற்சுற்றவிட்டாய்கண்ணேபராபரமே (௨௩)
வீண்காதறுத்ததல்லால்வேற்றிலுனைக்கண்ணுலுங் *
காண்கவரிதாக்கிவிட்டாய்கண்ணேபராபரமே (௨௪)
செத்துமத்திலிப்போலென்சிந்தைநொந்திடவுமெனைக் *
கட்டிமறைத்துவிட்டாய்கண்ணேபராபரமே (௨௫)
கூட்டமாமாயைச்சுட்டெரித்தகொள்ளிக் *
கட்டைவிறகாக்கிவிட்டாய்கண்ணேபராபரமே (௨௬)
வேல்விழியார்காமவேட்டையவாற்றிலெனைக் *
கால்மாற்றவிட்டுவிட்டாய்கண்ணேபராபரமே (௨௭)
வீடுகாடென்றுவிதித்ததுவுமல்லாமற் *
காடுவீடாகவிட்டாய்கண்ணேபராபரமே (௨௮)
ஓடாமலோடியுலகைவலஞ்சுற்றுதற்கோ *
காடோடவாககிவிட்டாய்கண்ணேபராபரமே (௨௯)
ஈடோயானுன்றனக்குமென்மீதிலேனோவிக் *
கீர்டிதயஞ்செய்துவிட்டாய்கண்ணேபராபரமே (௩௰)

அச்சமிலாப்புல்வேடனாவருக்குமென்னறிவைக் — — *
கைச்சூலையாக்கிவிட்டாய்கண்ணே பராபரமே — (௫௧)

வில்லங்கமற்றுவிளக்கொளிபோனின்றநெஞ்சைக் — *
கல்லங்கமாக்கிவிட்டாய்கண்ணே பராபரமே— — (௫௨)

மண்ணாதியெழுவாசைசமாமாயைமுககூட்டுக் — — *
கண்ணிபுட்கிட்டாக்கிவிட்டாய்கண்ணே பராபரமே— (௫௩)

கொண்டணைத்துக்கொள்ளுங்குணங்குடியான்சீரடியைக் … *
கண்டணைக்கநீயருளாய்கண்ணே பராபரமே — … (௫௪)

எட்டிலெழுதொண்ணாவிறையேயுன்றன்வடிவைக்— — *
காட்டிகொடுத்தருளாய்கண்ணே பராபரமே— — — (௫௫)

மைச்சினிச்சிபோலுமணக்கோலப்பெண்போலுங் … —*
கைச்சரசஞ்செய்தருளாய்கண்ணே பராபரமே— — — (௫௬)

நிதியாசைபற்றுநிரஞ்சனமாய்நின்றிடநற்— — — — *
கதியாசைதந்தருளாய்கண்ணே பரர்பரமே— — — (௫௭)

நாதவிந்தால்நின்றதவுநாமனன்றுபதேசங் — — — —*
காதிலுனாத்தருளாய்கண்ணே பார்பரமே — —(௫௮)

மாதவசியாகிமலைமுனையிற்புக்வுன்மேற் — *
காதலொன்றுதந்தருளாய்கண்ணே பராபரமே— — (௫௯)

நிர்க்குணத்தைக்கொண்டுநிருவிகற்பஞ்சாதிக்கக் — — *
சற்குணத்தைத்தீர்த்தருளென்கண்ணே பராபரமே — (௬௰)

ஜென்மந்தொலைத்தடிமைசின்மயமாய்நின்றிடவுங் — *
கன்மந்தொலைத்தருளாய்கண்ணே பராபரமே — (௬௧)

சித்தியொளிபரப்பிச்சிதறுநவகண்டாயோர் — —*
சுத்தனையுந்தந்தருளாய்கண்ணே பராபரமே— — (௬௨)

அஷ்டாங்கயோகமதிலாசைபறவேயெனது— — — *
கட்டைவெட்டுமுன்னருளாய்கண்ணே பரர்பரமே — (௬௩)

விற்புருவத்தூடுவிளங்குமொளிபற்றாடக் — — — *
கற்பித்தளித்தருளாய்கண்ணே பராபரமே — (௬௪)

ஒப்பிலருளாழியோடவடியேற்குமொரு — — o
கப்பலாய்வந்தருளாய்கண்ணே பராபரமே — — (௬௫)

உனையாள்வோமென்றடிமையுள்ளங்குளிர்ந்திடநின் — *
கனிவாய்திறந்தருளாய்கண்ணே பராபரமே — — (௬௬)

பொய்போர்த்தமெய்யதனைப்போட்டுவிடுமுன்மெனைக் *
கைகோத்தணைத்தருளாய்கண்ணேபராபரமே ... (௪௭)
வாய்ச்சதெனக்கென்றுமகிக்ஷிகொண்டுநின்றிடநின்— ... *
காக்ஷிபலித்தருளாய்கண்ணேபராபரமே — (௪௮)
மலைக்குமலைதிரிந்துமனுவாகவேனுமனக் ... ... —*
கலக்கந்தவிர்த்தருளாய்கண்ணேபராபரமே — (௪௯)
நாளுமடவாரைநன்னைதழுவக்கலவுங் ... — ... *
காணுதுகர்த்தருளாய்கண்ணேபராபரமே— — (௫௰)
தொண்டரிடஞ்சென்றிடவுந்தொண்டுசெய்துநின்றிடவுங் *
கண்டித்துவைத்தருளாய்கண்ணேபராபரமே — (௫௧)
மூலவர்க்கமாகமூமதிப்பாலுங்கொடுத்து — — *
காலபயந்தீர்த்தருளாய்கண்ணேபராபரமே — (௫௨)
சோற்றுலெடுத்தசுவரிடியாமற்பாது — — *
காற்றுமுகம்பார்த்தருளாய்கண்ணேபராபரமே— (௫௩)
மூலக்கனன்மூட்டிமூட்டிவருகாலனையுங் — — *
காலாலுதைத்தருளாய்கண்ணேபராபரமே — —௫௪)
சிட்டனெனவும்பூசைசெய்தேனுமிப்பாவிக் — —*
கட்டைகடத்தேறவைத்தாள்கண்ணேபராபரமே — (௫௫)
எட்டுமேரொட்டையுமெட்டெட்டுக்கயிறதனுற் — *
கட்டவுநல்விஷ்டம்வைத்தாள்கண்ணேபராபரமே — (௫௬)
ஆதாரமாறுமடுக்கடுக்காகக்கடத்திக் — — *
நாதக்குமேலேற்றிவைத்தாள்கண்ணேபராபரமே— (௫௭)
கும்பித்திரேசித்துட்கொள்ளும்படிக்குதவிக் .... —*
க்ம்பமுனைக்காட்டிவைத்தாள்கண்ணேபராபரமே— (௫௮)
பட்டிப்பசுப்பாலைப்பக்குவத்துடன்கலைக் — — *
கட்டிக்கறந்தடித்தாள்கண்ணேபராபரமே — —(௫௯)
நில்லாவுடற்குநிலையங்கொடுக்குமொரு — — *
கல்லர்வின்பாலளித்தாள்கண்ணேபராபரமே— — (௬௰)
சோமப்பாலூட்டிச்சுரந்தவாமப்பாலுங் — — *
காமப்பாலுங்கொடுத்தாள்கண்ணேபராபரமே — —(௬௧)
மண்டைநடுமண்டலத்துண்மண்டியமுதுண்டிடவுங் ...*
அண்டங்கடத்திவைத்தாள்கண்ணேபராபரமே — — (௬௨)

மூலாதாரத்துண்மூளைகொண்டுயர்ந்தெழுந்த — — *
காலாற்கனலெரித்தாள்கண்ணே பராபரமே — — (௬௩)

ஆபுங்கலையிரண்டுமாயாதடக்கியென்றன் — — *
காயநிலைக்கவைத்தாள்கண்ணே பராபரமே ... (௬௪)

அற்பவுடலாலருந்தவமேபுரிந்திடவுங் — — — *
கற்பமூலமுறைகைக்களித்தாள்கண்ணே பராபரமே... — (௬௫)

அண்டபிண்டமென்றுநின்றுந்திருக்கூத்தைக் — *
கண்டுகளிகூரவைத்தாள்கண்ணே பராபரமே — — (௬௬)

என்றுநவெண்ணமெல்லாமென்றுமிலன்றன்மனக் *
கன்றுடிக்குள்ளளித்தாள்கண்ணே பராபரமே — (௬௭)

எவ்வுலகுந்தானாயிருந்தவுனையன்றொழவுங் ... — *
எவ்வுமலக்கட்டறுத்தாள்கண்ணே பராபரமே — (௬௮)

அற்பவுடலமழிந்திடுமுன்றீபமிட்ட .... *
கர்ப்பூரமாக்கிவைத்தாள்கண்ணே பராபரமே — (௬௯)

விலங்கினங்களோடேவீற்றிடவுமேழைநெஞ்சு — — *
கலங்காதவண்ணம்வைத்தாள்கண்ணே பராபரமே ... (௭௰)

அநித்துக்கெடுக்குமரிவையர்க்காளாகாமற் — ..... *
கடக்கக்கடத்திவைத்தாள்கண்ணே பராபரமே — (௭௧)

நாற்றந்தொலையநறவணையுநாரியர்தங் — ... *
காற்றும்படாதுவைத்தாள்கண்ணே பராபரமே — (௭௨)

ஆணிப்பொன்மேருவாமுனையுமுன்னடிமை ... ... *
காணுங்கருணைவைத்தாள்கண்ணே பராபரமே — (௭௩)

வனவாசமேகவரமளித்துன்பொற்பதத்தைக் ... — *
கனமாயிலைவஞ்சவைத்தாள்கண்ணே பராபரமே — (௭௪)

கட்டிப்பிடித்தாலுமெட்டாதுநின்றவுனைக் — — *
கட்டிப்பிடிக்கவைத்தாள்கண்ணே பராபரமே — (௭௫)

மதபேதமோதிமறைக்குமறைசொல்லவதெல்லாங் — *
கதையாய்முடித்துவைத்தாள்கண்ணே பராபரமே — (௭௬)

அண்டபிண்டமாயுமதற்கப்பாலுநின்றவெளி — — *
கண்டவுனைக்காட்டிவைத்தாள்கண்ணே பராபரமே ... (௭௭)

உலையிலிட்டமெழுகாயுள்ளம்பதைத்துருகிக் ... ... *
கலுழ்கிபதுங்கண்டிலையோகண்ணே பராபரமே ... (௭௮)

வெம்பிமிகநொந்தேன்மெலிந்தேனென்கண்ணிருங் ... *
கம்பலைபுக்கண்டிலையோகண்ணேபராபரமே... ...(எக)

மெத்தமயலுற்றுவிருப்பமொடுபன்னாளுங்... ... ... *
கற்றும்பாழாக்கிவிட்டேன்கண்ணேபராபரமே... ... (அய)

பாலங்கடந்துபெரும்பாதைநடவாமலும்வீண் ... ... *
காலங்கடத்திவிட்டேன்கண்ணேபராபரமே ... .(அக)

பூத்தமலரொடுத்துன்பொன்னடியைபானுமென்றுங்... ... *
காத்திருந்துபூசைசெய்வேன்கண்ணேபராபரமே ... (அஉ)

விண்கொண்டுநின்றுவிளங்குமுனையெக்காலங் ... ...*
கண்கொண்டுகண்டேனென்கண்ணேபராபரமே ... ...(அங)

ஐயோவென்செய்கேனுருமற்றபாவியைநீ .. .. *
கையைவிடலாமோவென்கண்ணேபராபரமே... ... (அச)

நட்டநடுவீடுசென்றநானொளித்திருந்துனையுங் ... ...*
கட்டித்தழுவேனோகண்ணேபராபரமே ... ... (அரு)

அல்லும்பகலுமடியேன்படுந்துயர்க்கு... ... ...*
கல்லுங்கரைந்திடுமென்கண்ணேபராபரமே... ... ...(அசு)

பொல்லாப்புதைத்துவைத்துப்போவாருளத்தோறுங் ... *
கன்னங்கருதிரக்காண்கண்ணேபராபரமே.. ... ... (அஎ)

பணத்தைப்பணமெனவும்பார்த்ததுண்டோவுன்றனுக்கென் ...*
கணக்குத்தெரியாதோகண்ணேபராபரமே ... ...(அஅ)

நிற்கும்பொழுதாடைநெகிழ்ந்தாலுபசாரங் — — — —*
கைக்குஞ்சொலுவதுண்டோகண்ணேபராபரமே —— (அகூ)

நடையிலுலகனைத்துந்தானாயிருந்துமொரு... ... ... *
இடையிடையுமானாயென்கண்ணேபராபரமே... ... ... (கூய)

உனக்குமெனைமறந்தோருள்ளக்கருத்திலுண்மாங்... ... *
கனிக்குளுருவண்டானாய்கண்ணேபராபரமே ..... — (கூக)

நெக்குருகிநின்றநிலைதோன்றுநிர்க்குணத்தார்... ... — ...*
கைக்குட்பத்தாடிநின்றாய்கண்ணேபராபரமே... ... (கூஉ)

பகித்தமனம்வாழிபரமார்த்தமும்வாழி ....*
சுகித்தநிலைவாழிகண்ணேபராபரமே... ... ...(கூங)

அத்துவிதம்வாழியதிவகண்டிதம்வாழி ... ... *
கர்த்தனேநீவாழிகண்ணேபராபரமே ....(கூச)

தற்பரமேவாழிசாரார்தந்தந்தரவும் ... ... *
கற்பகமேவாழியென்கண்ணேபராபரமே... ... ... (௧௫)

சிற்பரமேவாழிசிவயோகியர்வாழி .. .. *
கற்பனையெல்லாம்வாழிகண்ணேபராபரமே... ...... (௧௬)

தற்பதவியம்வாழிநவின்றமறைவாழி .. .. *
கற்பதாரிகள்வாழிகண்ணேபராபரமே... ... ... — (௧௭)

சித்திரிசனம்வாழிசின்மயத்தர்ஞானம்வாழி .. .. *
சர்த்தர்வியம்வாழியென்கண்ணேபராபரமே .. ..(௧௮)

மாதவத்தோரும்வாழிமௌனருத்தனையும்வாழி ... . *
காதலித்தோரும்வாழிகண்ணேபராபரமே... ... ... (௧௯)

குவலயத்தோரும்வாழிதண்குடியாரும்வாழி .. .. *
கவலையற்றோரும்வாழிகண்ணேபராபரமே ... ... (௨௰)

கண்மணிமாலைக்கண்ணி முற்றிற்று,
ஆக திருப்பாடல் ௮௱௧௰

மனோன்மணிக்கண்ணி.

மெய்தொழவுமேலுமேலுநந்திகேச்வரனைக் .. .. *
கைதொழவுங்கனவுகண்டேன்மனோன்மணியே... ... ... (௧)

கோப்பாகவுமுனையான்கொண்டாடிப்பாடவுநீ ... ... *
காப்பாகவுங்கனவுகண்டேன்மனோன்மணியே ... ...(௨)

பெண்மணிர்த்தத்தோடுனையான்பிரியாமணம்புணரக் — ...*
கண்களுறங்காக்கனவுகண்டேன்மனோன்மணியே ... ... (௩)

மலர்ந்திருக்கும்பொற்கமலமணவாளாயிலிருவருங்கை ... *
கலந்திருக்கவுங்கனவுகண்டேன்மனோன்மணியே... ... (௪)

மெய்மஞ்சட்குளிப்புக்கண்விழிப்புமெய்க்களிப்புமெனைக்... *
கைமிஞ்சவுங்கனவுகண்டேன்மனோன்மணியே... ... ...(௫)

மையிட்டவுங்கயற்கண்மலரின்மலர்முல்லையித்... ... ... *
கைபூட்டவுங்கனவுகண்டேன்மனோன்மணியே ... ... (௬)

மெய்தழுவவும்பிருவர்மெய்யோடுமெய்நெருங்க... ... ...*
கைதழுவவுங்கனவுகண்டேன்மனோன்மணியே... ... ... (௭)

வாமப்பாலைப்பெருகமழுவாவிபம்வருக... ... ... *
காமப்பாலுன்னைக்கனவுகண்டேன்மனோன்மணியே ...(௮)

பாலனுரவுங்கான்றபாலுணவுமென்னைவிட்டுத்... ... ...*
காலமெனவுங்கனவுகண்டேன்மனோன்மணியே... ... ... (௯)

வடியர்வருளமிர்தம்வடியவடியக்குழைந்... — ....*
குடியாமெருங்கனவிற்குடித்தேன்மனோன்மணியே ... ... (௰)

கோடிபெருமதிகள்கூடியொருமதிபோல்... ... ...*
வாடியென்மானேபெம்மானேமனோன்மணியே... ... (௰௧)

கண்ணேயென்கண்மணியேகண்குளிர்ந்தகட்டழகுப் ... *
பெண்ணேயமிர்தப்பிழம்பேமனோன்மணியே... ... (௰௨)

பெண்ணேமயிலினமேபேரனமேயென்றுனையென் ... *
கண்ணிற்கிடைக்கக்காண்பேன்மனோன்மணியே... ...(௰௩)

வன்னவுடைக்குழூன்றன்வாலவயதினுக்கும் .. ..*
அன்னநடைக்குமென்றனாசைமனோன்மணியே... ...(௰௪)

கூந்தலிலங்கக்குரும்பைத்தனங்குலுங்க... ... ... *
நேர்ந்துநடம்புரிந்துநிற்பாய்மனோன்மணியே... —(௰௫)

துவளுந்துடியிடையுந்தோகைமயிலனடையும் .... *
பவளவிதழுமென்றுபார்ப்பேன்மனோன்மணியே... — (௰௬)

மலர்மாலைகள்கிடந்துமார்பிற்பின்னலிடுமுன்றன்... ... *
அலர்முலையும்யானென்றணைவேன்மனோன்மணியே... (௰௭)

வெய்யிற்பட்டாலும்வெதும்புமுடலாயுனது... ... ... *
மெய்யிற்றொட்டாலுங்கதம்வீசும்மனோன்மணியே... ...(௰௮)

காற்றுப்பட்டாலுங்கலங்குமென்றன்மேனியிதீ ... ... *
பார்த்துத்தொடவின்பம்படைப்பேன்மனோன்மணியே .. (௰௯)

பிடியானைப்போலும்பிடிப்பேன்முலையைக்குழை ... ... *
குடியானைப்போலுங்குடிப்பேன்மனோன்மணியே ... (௨௰)

கூந்தலுக்குநெய்தோய்த்துக்குளிர்மஞ்சணீராட்டி... ... *
வார்த்துசிங்காரித்துவைப்பேன்மனோன்மணியே... ... (௨௧)

காலித்பனிநீர்விட்டுக்கழுவிமடிமீதுவைப்பேன்... ... ... ✽
மேலிலத்தரும்பூசிவிடுவேன்மனோன்மணியே ... ... (உஉ)

ஜாதம்பரிமளிக்குக்கஸ்தூரிப்பொட்டிடுவேன்.... ... ... ✽
போதஞ்சவாதணிந்துபுணர்வேன்மனோன்மணியே ... (உங)

தலைக்குமிணுக்கெண்ணெய்தடவிச்சடைபின்னிவைப்பேன்... ✽
மூலைக்குவன்னக்கச்சிறுக்கிமுடிப்பேன்மனோன்மணியே... (உச)

கட்டாடைவர்க்கமெல்லாங்கண்டுகளித்துயர்ந்த... ... ...✽
பட்டாடைவர்க்கம்வைத்துப்படைப்பேன்மனோன்மணியே (உரு)

மூக்குக்குத்திக்காதுகுத்திமுழுவயிரந்தூக்கிவைப்பேன் ... ✽
கோக்குமுத்தூந்தூக்குமுத்துங்குவிப்பேன்மனோன்மணியே ()

கைக்குஞ்சரிகடகங்கல்லுமிழைத்துக்கொடுப்பேன் ... ... ✽
மொய்க்குழற்குஞ்சடைப்பில்லைமுடிப்பேன்மனோன்மணியே (

தங்கக்கொலுசுஞ்சிலம்புந்தண்டைரத்னபாடகமும் ... ✽
கொங்கைக்குமோகனமாலைகொடுப்பேன்மனோன்மணியே (உஅ)

காலாழிபீலிமுதற்கன்னகையும்பொன்னகையும் ... ...✽
நாலாட்சுமைவேண்டினடக்குமனோன்மணியே ... ... (உகூ)

முடிமீதினுமகுடமுடிசூட்டுவேனற்குணங் ... ... ✽
குடிமாதவர்கள்குலக்கொழுந்தேமனோன்மணியே ... (ஙய)

சன்னிதானத்திற்சரணஞ்சரணமென்று ... . ✽
சொன்னமலர்தூவித்தொழுவேன்மனோன்மணியே ... ...(ஙக)

கர்ப்பூரமேற்றிக்கரத்தீபவாலாத்தி .. ..✽
எப்பாரும்போற்றவெடுப்பேன்மனோன்மணியே... ... (ஙஉ)

முக்காலமும்பூசைமுடிப்பேன்முக்காலமல்லால்... ... ..✽
எக்காலமும்பொங்கலிடுவேன்மனோன்மணியே... ... (ஙங)

சாதஞ்சலிகைச்சமைத்துச்சாம்பிராணித்தூபமிட்டுப் ... ...✽
பாதந்தொழுதிட்டுப்படைப்பேன்மனோன்மணியே... (ஙச)

பச்சைப்பருப்புமுதற்பருப்பிற்பத்துவகைகடைவேன் ... ✽
வச்சநறுநெய்யுருக்கிவார்ப்பேன்மனோன்மணியே ... (ஙரு)

முட்டைப்பொரிப்பேன்முழுக்கோழியும்பொரிப்பேன்... ...✽
மட்டைட்டீங்காளிற்றருவேன்மனோன்மணியே... ... (ஙசா)

ஆட்டுக்கறியும்கொள்வேனதிலனைத்தம்வகைசமைப்பேன் ...*
கூட்டுக்கறியும்பண்ணிக்கொடுப்பேன்மனோன்மணியே (௩௭)

குட்டிக்கறிகானுங்குழம்புபண்ணித்தாளித்தோர் ... .*
சட்டிக்கறியேனுந்தருவேன்மனோன்மணியே ... ... (௩௮)

பால்பழமுந்தேனும்பலகாரவர்க்கங்களும் ... ...*
மேலுமேலும்பரப்பிவிடுவேன்மனோன்மணியே ... (௩௯)

அடிக்காயிரம்பொன்விலையானாலுமீந்துணைங் ... ... *
குடிக்குண்மாளிகைகட்டிக்கொடுப்பேன்மனோன்மணியே (௪௰)

ஆணிப்பொன்மதிளுயர்ந்தவரண்மனையுந்தீர்ப்பாக ....*
மாணிக்கமேவிளக்காய்வைப்பேன்மனோன்மணியே ... (௪௧)

துலங்குமணிமண்டபமுஞ்சொர்க்கமெனவுமிலங்கா ... ...*
நிலங்குமலங்காரஞ்செய்திடுவேன்மனோன்மணியே... (௪௨)

ரத்தினங்கள்வைத்திழைத்திராவைப்பகலாக்குஞ் ... ... *
சித்திரங்கள்வகைவகையாய்ச்செய்வேன்மனோன்மணியே (௪௩)

மண்ணுபழுந்தாமன்மறமேமுழுவதிலுங் ... ...*
கண்ணாடியாயிருக்கக்காண்பேன்மனோன்மணியே ... (௪௪)

மங்காதொளிபரப்பும்மௌனமணியாலுமொரு ... ... *
சிங்காசனமேடைசெய்வேன்மனோன்மணியே... ... (௪௫)

நாற்காலிகட்டில்பலநற்பவளவாசனங்கள் ... ...*
நீக்காமறச்சுற்றும்நிறைப்பேன்மனோன்மணியே ... (௪௬)

பாதம்பூசித்துபணிவிடைகள்செய்துநித்த ... ... *
மாதர்களோவனத்தம்வைப்பேன்மனோன்மணியே ... (௪௭)

புவனத்தாசரெல்லாம்போற்றிப்பணியவென்றன் ... ... *
மௌனமலரணைமேல்வாழ்வாய்மனோன்மணியே... ... (௪௮)

கட்டிலினுக்கூடிகளிகூர்ந்துகொண்டிருப்போம் ... ... *
தொட்டிலினுமாடிச்சுகிப்போமனோன்மணியே... ... (௪௯)

முடிமன்னர்தம்வாழ்வுமுதலெல்லையுமெங்கள்குணங் ... ... *
குடிமன்னர்தம்வாழ்வுங்கொடுப்பேன்மனோன்மணியே (௫௰)

சொன்னமலைமலையாய்த்தெர்கைவகையிலாதளிக்குங் ... ...*
கன்னனெனவுமெனைக்காண்பாய்மனோன்மணியே ... ...(௫௧)

போதத்தனங்குவித்தபொக்கிஷமுங்கைகுவிப்பேன் ... ... *
பாதத்தினும்வீழ்ந்துபணிவேன்மனோன்மணியே ... (௯௨)

இடையாப்பொருள்களெல்லாங்கிடைக்குமின்னநீயுமென்றாற் *
படையாப்பொருள்களெல்லாம்படைப்பாய்மனோன்மணியே ()

தானசமுத்திரம்போற்சான்றோர்க்கெல்லாமளிப்பாய் ... *
சேனசமுத்திரமுஞ்சேர்ப்பாய்மனோன்மணியே... ... (௯௪)

முடிதாக்குமன்னர்முதலெல்வருமுன்வாயிற் ... ... *
படிகாக்கும்வாழ்க்கைப்படைப்பாய்மனோன்மணியே ... (௯௫)

கவிராஜரும்விருதுகட்டியங்கள்கூறிநிற்பார் ... ... *
தவராஜரும்போற்றத்தவளூர்மனோன்மணியே ... . (௯௬)

உன்மீதிலாசித்துயிர்பொருளுன்றாட்களிப்ப ... ... *
என்மீதிலாசையுனக்கிலையேன்மனோன்மணியே ... ...(௯௭)

உள்ளதுரியதெல்லாமொப்புக்கொண்டபின்னலவோ... ... *
கள்ளமனம்படைக்கக்கற்றாய்மனோன்மணியே ... ... (௯௮)

வேசைக்குணத்தைவிரும்புவாயென்றறிந்தாற் .. ... *
காசுப்பணத்தைநான்காட்டேன்மனோன்மணியே ... (௯௯)

படையாதெல்லாமென்றாற்படைத்துப்பரதேசிகுணம் ... *
குடியாவாயோதேடிக்கொண்டாய்மனோன்மணியே ... (௱)

உத்தமிப்பெண்ணென்றுவந்தேனிப்போதுன்றன் ..... *
பத்தினித்தனத்தைநன்றாய்ப்பார்த்தேன்மனோன்மணியே (௱௧)

ஊன்பத்துனக்கிருந்தாலிராஜராஜேஸ்வரியாய் ... ... *
ஐம்பத்தறுதேசமுநீயாள்வாய்மனோன்மணியே... ...(௱௨)

உள்ளமணவாளனுனக்கெவனோவென்னைவிடக் ..... *
கள்ளமணவாளனிச்சைகடிதோமனோன்மணியே ... (௱௩)

வேசியென்றபேர்படைத்துவெளியிற்புறப்பட்டவளைத் ... *
தாசியென்றுசொல்லத்தகாதோமனோன்மணியே .... (௱௪)

ஆடாதுமாடியவிசாரியானவுனைப் ... ... *
பாடாதும்பாடிலென்னபயமோமனோன்மணியே... (௱௫)

மூக்குமுனைக்குமுழமூணேனோபத்தினிபோல் ... ... *
நாக்குமுனைக்குமுழந்நாலேன்மனோன்மணியே ...(௱௬)

பானைச்சோறெல்லாம்பதம்பார்த்துதின்றதினி ... ...*
மானபழியிலுயிர்மயிர்தான்மனோன்மணியே... ... (௬௭)

இனிக்கண்டதிர்த்துகொள்விலுண்பிளையானாத்... ... ... *
தனிக்கண்டபோது புத்திசருவான்மனோன்மணியே... ...(௬௮)

பல்லையிராழ்கடிக்கப்பாலைக்கடியொடிக்கக்... ... ... *
கல்லைத்தேங்காயுடைக்கக்காண்பாய்மனோன்மணியே ... (௬௯)

தடிபோலிருந்துனையால்சீர்திகெட்டபாழுங்குணைக் ... ... *
குடியார்க்கெப்படிகூட்டிக்கொடுப்பேன்மனோன்மணியே (௭௰)

போனதெல்லாப்போச்சிப்பொழுதும்விடிந்ததினி ... ... *
தானதெல்லாமனத்திருடேன்மனோன்மணியே ... ... (௭௧)

மல்லார்ந்துதான்படுத்துமார்பிற்றுப்பிக்கொண்டுமினும் ... *
பல்லைக்குத்திபுழுகார்ந்தோபார்ப்பேன்மனோன்மணியே...(௭௨)

என்னைவிட்டால்மாப்பிளைமாமொத்தனையோவுன்றனுக்கே ... *
வுன்னைவிட்டாற்பெண்ணெனக்குழுண்டோமனோன்மணியே ( )

தடித்தனமேசெய்தாலுஞ்சமுசாரத்திற்படிந்து .... *
குடித்தனஞ்செய்தாலென்மனக்குறையோமனோன்மணியே(௭௪)

கொடுத்தணைத்துக்கொண்டேதுயில்வன்மற்றநேரமெல்லாம் *
எடுத்தணைத்துக்கொண்டேயிருப்பேன்மனோன்மணியே ...(௭௫)

படுத்துப்படுத்துநெஞ்சிற்பளிச்சுபளிச்சென்றமுத்தங் ... *
கொடுத்துக்கொடுத்துநான்கொள்வேன்மனோன்மணியே (௭௬)

வன்னச்செழும்பவளவாயிதழூறற்சுவைத்துன்... ... ... *
கன்னத்தில்விழுந்துகடிப்பேன்மனோன்மணியே... ... (௭௭)

ச்சிறக்குமாதரின்பங்கைச்சிறக்கும்போதவின்பம்... ... *
லச்சிறக்குங்கொங்கையிற்கலைவைப்பேன்மனோன்மணியே,௭௮

நித்தநித்தொழுகுகாமதேனமிர்தவூறலுண்பேன்... ..... *
முத்திதழுவித்தழுவிமுகப்பேன்மனோன்மணியே ... (௭௯)

படியோர்க்கெல்லாமுயன்றபடியோர்களானகுணங்... ... *
குடியோர்கள்போலுமின்பங்கொள்வேன்மனோன்மணியே (௮௰)

சேயாயுமென்மடியிற்செங்கிளையாடியருட் ... ...*
டாயாயுமக்கலகருவாய்மனோன்மணியே ... ... (௮௧)

அங்கைதந்துதந்தேடணைத்தணைத்தாருளமிர்தம்... ... ...*
கொங்கைதந்துதந்தேகொடுப்பாய்மனோன்மணியே... (௮௨)

தாவியணைத்தணைத்தென்றுமேயுனையென்றிந்தப் ... ...*
பாவிமடியில்வைத்துப்பார்ப்பேன்மனோன்மணியே ... (௮௩)

ஏங்கியழுவேனோவுன்னிணையடியைக்காணாமற் ... ... *
றூங்கிவிழுவேனோவென்றொழிமனோன்மணியே ... .(௮௪)

உலைபோலெரியுமென்றனுளங்குளிரமேல்வளர்ந்து... ... *
மலைபோலெழுந்தருளிவருவாய்மனோன்மணியே ... (௮௫)

கன்மமறுவதெந்தக்காலமோயானறியேன் ... ... *
தன்மைதருவதெந்தநாளோமனோன்மணியே... ... ...(௮௬)

பன்னீரொழுகுமுன்றன்பாதமலரையென்றன் ... ...*
சென்னிமீதென்றுமருள்செய்வாய்மனோன்மணியே ... (௮௭)

தாயினுமிக்காங்கருணைத்தயாநிதியேயிவ்வுரையை .... *
நாயினுமிக்காங்கடையேனவின்றேன்மனோன்மணியே ... (௮௮)

கால்பிடித்துக்கண்ணில்வைத்துக்கைகுவித்துமெய்மயங்கி ...*
மால்பிடித்துச்சொன்னதெல்லாமகிழ்வாய்மனோன்மணியே(௮௯)

அடியானையுன்னடியார்கடியானுமாக்கிக்குணங்... .... *
குடியானெனைப்பிரியக்கொடுப்பாய்மனோன்மணியே ...(௯௰)

உச்சிதவச்சிரமலையேயொப்பொன்றிலாமாணிக்கமே ... ...*
கச்சிதபச்சைமரகதமேமனோன்மணியே ... ... (௯௧)

செப்புருவாணிமுத்தேசிறந்தபவளக்கொடியே ... ... *
புட்பராகக்கமலப்பூவேமனோன்மணியே ... . (௯௨)

கோமேதகமேகுளிர்ந்தவயிடூரியமே ... ... *
மாமேருவேநீலமலையேமனோன்மணியே ... ... (௯௩)

வற்றாவருட்செல்வவாழ்வேகருணாநிதியே ... ... *
பொற்றாமரைக்கமலப்பொகுட்டேமனோன்மணியே ... (௯௪)

அல்லிமலரேபலச்செங்கழுநீர்மலரே... ... ... *
மல்லிகைக்கொத்துமலரேமனோன்மணியே ... ... (௯௫)

பொன்மலரேபன்மலரேபுகழ்கருப்பன்னீர்மலரே... ... ...*
மன்மதபாணமாமலரேமனோன்மணியே,.. ... ... (௯௬)

சூடலைநிறைந்தகொருகொத்தலரிச்செம்மலரோ... ... ... *
மடலவிழ்ந்தசெந்தாழைமலரோமனோன்மணியே... ... (கஎ)

பூக்குமருண்மலரோபுளிக்காதமாமலரோ... ... ... *
வாங்குமலரோசண்மலரோமனோன்மணியே — — — (கஅ)

வஞ்சியர்செய்மோசமுடன்மறலிசெய்நாசத்திற்கும் ... *
அஞ்சியுனக்கடிமையானேன்மனோன்மணியே .... (கக)

அடியாருமவாழியிர்தவடியேனுமவாழிகுணங் ... — —*
குடியாருமவாழிகுணக்குன்றேமனோன்மணியே— —(௨௰)

மனோன்மணிக்கண்ணி - முற்றிற்று

ஆகதிருப்பாடல் - ௱௮ம்

உமையாள்பாதமுன்னிற்க.

ஆதியந்தங்கடந்தவுமையாடன்பாதம் ... ... — *
அகண்டபரிபூரணமாமையர்பாதஞ்— — — —*
சோதியந்தங்கடந்தகணபதியின்பாதந்— — — — —*
தொழுதிரஞ்சிக்காங்குவுத்துப்போற்றல்செய்து — —*
வாதியந்தங்கடந்தநந்திபாகமென்றும் ... — — *
வாலைநிர்வாணிமனோன்மணிபாகமென்றும்— ...... *
ஓதியந்தங்கடந்தகண்டமிரண்டதாக— ... — — *
ஒன்றுமறியாவறிஞுணாசெய்தானே — — — *

நந்திஸ்வரக்கண்ணி.

ஆதியந்தங்கடந்தவுமையாளருணாந்தச் — — — — *
சோதியந்தங்கடந்தசெழுஞ்சுடரோநந்தீஸ்வரனே.... — (௧)

முடியடியாய்நின்றதடிமேலடிணிவிளக்கே... ... ... *
அடிமுடியாய்நின்றநடுவணையேநந்தீஸ்வரனே — ... (௨)

கர்த்தனேயாளுன்கருணைத்திருவடிக்கே... ... ... — *
எத்தனைதான்றெண்டனிடுவேனந்தீஸ்வரனே ... ... — (௩)

தீர்க்கதெண்டனிட்டேன்றிருவடியைப்போற்றிசெய்தேன் .... *
வாக்குநடக்கவருமருணந்தீஸ்வரனே... ... ... (௪)

மாசில்பரவெளியேமௌனமணிமாளிகையில்... ... ... *
வாயிற்பெருவழியேமகத்தேநந்தீஸ்வரனே... ... ...(௫)
மகத்தேரனேஞானமனழியேயருள்வெள்ள...... ... . *
மூகத்தோனேமௌனமூலையேநந்தீஸ்வரனே... ... — (௬)

ஞானம்விளைவேற்றுநல்லசமூசாரிகட்கு... ... . *
மௌனமனழுபூற்றுமுகிலேநந்தீஸ்வரனே... ... ... (௭)

மூம்மூலபோகமூமுதஞ்சித்திசெய்துதர... ... .*
உன்றுமேலயாகுமுயிரநந்தீஸ்வரனே ... . (௮)
சமர்கொடுத்துவென்றோங்குசாம்பவிமுயைக்கைப்படுத்தித் — *
தமர்விரித்துநீக்கித்தருவாய்நந்தீஸ்வரனே — — (௯)

நல்லோர்க்குநீகாட்டநலக்குங்குணங்குடிவாழ் — — *
வெல்லோர்க்குநேர்காட்டவெளிதோநந்தீஸ்வரனே.... — (௰)
இல்லினிடங்கூட்டிமிசழ்விரியுஞ்செங்கமல — — — *
லவ்வினிடங்காட்டிவைப்பாய்நந்தீஸ்வரனே — ... (௰௧)
சாமிதனையுஞ்சுத்தசைதந்நியமானசிவ — — — .... *
காமிதனைபுமென்றுகாண்பேநந்தீஸ்வரனே! — — (௰௨)

உண்மையாளுமெய்யாயுவந்தடிமைகொள்ளும்வண்ணம் — *
எண்மையாளுமையாவிறையேநந்தீஸ்வரனே — — (௰௩)

கேசாந்தைக்காட்டிக்கிளரொளிபாடன்னருட்பால்... — —*
ஆசரித்தேஷட்டவருள்வாய்நந்தீஸ்வரனே — ... ..(௰௪)

சத்திசிவமுதலாய்ச்சாம்பவியம்பாளருளிற் ... — —*
செத்தசிவமுதலாய்ச்சித்தாம்நந்தீஸ்வரனே— ... (௰௫)

சித்தாளையீன்றசிறுபெண்ணூர்தாலிரண்டு— ... — *
பொற்றூளையென்றேபுணர்ந்தநந்தீஸ்வரனே ... (௰௬)

பத்துவயதுடையபாலைவயனைறாயென்றேநீ— — — *
சித்தர்க்கெல்லாந்தாயாகச்செய்தாய்நந்தீஸ்வரனே —(௰௭)

காமரூபியைநித்தியகல்யாணசுந்தரியை — - *
ஓமரூபியையெற்குமுதவுநந்தீஸ்வரனே ... ... —(௰௮)

கேசரியாடன்தருணிகிட்டின்றேவாசாம... ... ...*
கோசரவாழ்வெல்லாங்கொடுப்பாய்நந்தீஸ்வரனே... ...(௰௯)

மூலவொளிகூட்டிமோனக்குணங்குடிக்கும் ... ... *
மேலைவழிகாட்டிவிடுவாய்நந்தீஸ்வரனே ... ... —(௨௰)

கண்டப்பலங்கடத்திகமலாசனத்தேற்றி ... ... — *
அண்டப்பாலுங்கொடுத்தேயருள்வாய்நந்தீஸ்வரனே— — ௨௧)

செங்கமலபீடச்செல்வியர்தாஞ்சித்தம்வைத்தாற் .. .. *
றங்கமலைகூடத்தருவாண்நந்தீஸ்வரனே... ... ...(௨௨)

போதகத்தைப்பூட்டிப்புருவமையத்தாயுமெற்கும் ... ... *
வாதவித்தைகாட்ட வருவாய்நந்தீஸ்வரனே... ... ... (௨௩)

ரசயோகசித்துநயனருளினல்டிலைம... ... ... — *
நிசயோகமுற்றநிலைப்பேனர்தீஸ்வரனே ... ... (௨௪)

மகாவித்தைகாய்ப்பதற்குமதியமிர்தஆறலுண்டே ... ... *
லகிரியுற்றநிற்பதற்குலயிப்பாய்நந்தீஸ்வரனே... ... (௨௫)

குப்பவமலையெனுங்கோமைளியெல்லாங்கக்கவைத்துக்— *
கற்பவமலைவரக்காட்டுநந்தீஸ்வரனே ... ... (௨௬)

கற்பவமலைவார்ச்சாட்டிக்கற்பமுண்டதற்பின்... ... ... *
பற்பவமலைமுறைபகர்வாய்நந்தீஸ்வரனே... ... ...(௨௭)

சூதமுதனீற்றிச்செசன்மதியமிர்தப்பிர .. .. *
சாதமதிலூற்றித்தருவாய்நர்தீஸ்வரனே ....(௨௮)

அற்பதேகமதாயடியேனெடுத்தவுடல்... .... —*
கற்பதேகமதாய்க்கணிப்பாய்நந்தீஸ்வரனே... ... ... (௨௯

உமைநம்பினேர்வாழுமோங்குகுணங்குடியார்க் ... ...*
கெமனும்பினையாருமஞ்சிரோநந்தீஸ்வரனே... — —*

ஞநீஸ்வரரிலொன்றாய்முடித்தருள்வாயாகிலெனைச் — ... *
சநீஸ்வரர்கூடச்சாட்டராய்நந்தீஸ்வரனே ... ... (௫௧)

காலனும்போய்விடுவான்காலங்கடந்துசிறு... ... ... *
பாலனும்மாய்விடுவேன்பரமேநந்தீஸ்வரனே... ... ...(௫௨)

கவனமணிமுதலாய்க்கட்டியென்கைக்களிக்க ... — *
மௌனமணித்தாய்க்குவகுப்பாய்நந்தீஸ்வரனே ... (௫௩)

மாயைவலைவீசிமயக்காமன்மாயைக்கென்மேல் — — —*
நேயவலைவீசநிகழ்த்துநந்தீஸ்வரனே... — -(௫௪)

தோகையிளமூன்றார்சுகபோகமும்பசியும் — — ...*
போகமுமிசொல்றாற்போதும்நந்தீஸ்வரனே ....(௫௫)

பெண்ணுபுலகமெல்லாம்பிணக்காடதாக்கினையோ — — *
மண்ணாப்மடிவதென்னமாயம்நந்தீஸ்வரனே... ... (௫௬)

சையோகப்பித்தைவெல்லசமர்த்தொடுகச்சைகட்டு... — *
மெய்யோகப்புத்திசொல்லவேண்டும்நந்தீஸ்வரனே — ...(௫௭)

பாஷாண்டிகடோறும்பலனொன்றுமின்றிவெறும் — — *
வேஷாண்டியாக்கிவிடுகோணந்தீஸ்வரனே — —(௫௮)

பிணம்பிடுங்கித்தின்னும்பேய்போற்சிலநாளையர் — ... *
பணம்பிடுங்கித்தின்பதென்னபாபம்நந்தீஸ்வரனே — ...(௫௯)

பணமுடியானென்றும்பவம்பிடியானென்றுமெனைக்... ... *
குணங்குடியானென்றுங்குறிப்பாய்நந்தீஸ்வரனே..... —(௬௰)

உன்னையன்றியேழைவேறொருவனையும் — — —*
அன்னையென்றுமாறவருள்வாய்நந்தீஸ்வரனே... — (௬௧)

ஆத்தாளைத்தேடியலைந்தலைந்தாடியிற்பறக்குங் .. — —*
காற்றாடியானேன்கண்ணேநந்தீஸ்வரனே — —(௬௨)

மான்பிரிந்தகன்றாய்மயங்குதற்கென்றாய்வயிற்றி ... —*
லேன்பிறந்தகன்றேயிருந்தேனந்திஸ்வரனே — (௬௩)

ஏனோவெனையீன்றெளந்தாயிவ்வாறுசெயத் — — *
தானோவினுமென்செயத்தானோநந்திஸ்வரனே... ... ...(௬௪)

தாய்தாயேயென்றேதலைப்புரட்டங்கொண்டுவெறு — —*
வாய்வாயேயென்றேமடிவேனந்திஸ்வரனே — ... (௬௫)

தாயைவிட்டுப்பிள்ளைதவிப்பதறிந்தவுடன் — — — — *
சேயையிஷ்டம்வைத்தணைக்கச்செய்யும்நந்தீஸ்வரனே — (௪௬)

கன்றதனுக்கேயிரங்குங்காலியெனவென்மனைத்தாய் — *
என்றன்றனக்கிரங்கவிசைப்பாய்நந்தீஸ்வரனே ... ... (௪௭)

மாயைமணமுடித்துமயக்காதெனையீன்ற — — *
தாயைமணமுடித்துத்தருவாய்நந்தீஸ்வரனே — — (௪௮)

தற்பரத்தினல்வெளியேசர்வபரிபூரணமே — — — *
சித்பரத்தினொளியேசிவமேநந்தீஸ்வரனே ... — (௪௯)

முத்தரெல்லாம்வாழியெங்கண்மோனமணித்தாயருளுந் — — *
சித்தரெல்லாம்வாழிசுத்தசிவமேநந்தீஸ்வரனே ... ... (௫௰)

குற்றம்பலநீக்கிக்குணங்குடியென்றிருமேவுஞ் — — ... *
சிற்றம்பலம்வாழிசிவமேநந்தீஸ்வரனே — — (௫௧)

நந்தீஸ்வரக்கண்ணி

முற்றிற்று

தனி

கட்டளைக்கலித்துறை,

மடக்கிமடக்கிவருமாயினுஞ்சொல்லுமான்பொருளும் ... *
அடக்கியடக்கிக்கிடக்குங்கண்டீர்பல்லுறுப்புந்துகொள்வார் — — *
நடக்கினுமாணவுண்மையினுள்ளிருடையொழிந்து ... ... *
கிடக்கினுமரமென்றறிகாநாடிக்கிளத்திளத்தியதே... ... ...*

ஆக திருப்பாடல்-௩௯௰௫,

உ

பிசுமில்லாகிற் றகுமானிற்றகீம்

மஸ்தான்சாகிபு அவர்கள்பாடிய

கீர்த்தனைகள்.

தரு, புந்நாகவராளிராகம்-அடதாளசாப்பு;

பல்லவி.

பாமுத்தன்குணங்குடிதெருவில்வரும்பவனி ... ... *
பார்த்துவருவம்வாருங்கள் ... ... *

அநுபல்லவி,

வாமூத்தகீசுரார்கணந்-தாமூற்றவர்களிரு ... ... *
பாமெய்த்தினிபதி-தாமூத்திபருளும்நம் ... (பாமுத்தன்)

[சரணங்கள்,]

சாத்திரமேஞ்-சலாம்-சலாம்-சலாமென்ன — — *
ஜகஜதிமின்னல்-டளீர்-டளீர்-டளீரென்ன ... ... *
பேர்த்துளம்போற்றும்-தகீம்-தகீம்-தகீமென்ன — *
பிசமில்லாஇற்றகு-மானிற்றகீமென்றுள் — — *
அல்சயாமலெருநிலை-விசுவாசமருளும்நம்... (பாமுத்தன்)

கருமத்தாளந்-திடல்-திடல்-திடலென்ன ... ... *
கைமணியோசை-கணீல்-கணீல்-கணீலென்ன ... ... *
திருவாளாட்டந்-திடும்-திடும்-திடுமென்ன... .... *
தினத்தந்தோந்தினத்தந்தோம் மனத்தொந்தோ-மனத்தொந்தோ
எனத்தாளனைத்தையு-தினைத்தபடியாகநம்... ..... (பாமுத்தன்)

நாசச்சரீரம்-நரோல்-நரோல்-நரோலென்ன ... ... *
நஞ்சவினைகள்-சரோல்-சரோல்-சரோலென்ன ... ... *
வீசுமருட்கள்-விறீல்-விறீல்-விறீலென்ன... ... ... *
வேதவாளெடுத்தேந்தி-சோதிவாசியிலேறி ... . *
ஆதிபிசுமிலுட-ஞ்ஞுதிக்கலிமாவைநம் ... ... (பாமுத்தன்)

நாடாதபேர்கள்-பயம்-பயம்-பயமென்ன ... ... *
நம்பியபேர்கள்-ஜயம்-ஜயம்-ஜயமென்ன ... ... *
தேடியபேர்கள்-நயம்-நயம்-நயமென்ன ... ... *
திக்குத்திசைகளெங்கு-மிக்கவொளிபரப்பி ... ... *
ஒக்கவுலகமொரு-கைக்குள்ளடக்கும்நம் ... ... *
பாரூத்தன்குணங்குடி தெருவில்வரும்பவனி *
பார்த்துவருவம்வாருங்கள் — — (௧)

முற்றிற்று,

தரு, இராகம்-சௌராஷ்டிரம்-சாப்புதாளம்,

பல்லவி.

இல்லல்லாகூவென்றென்னைமறந்துகொண் ... *
டிருப்பாயென்னெஞ்சமே ... ... *

அநுபல்லவி,

அல்லாகுவென்றவகண்டிதகண்டமாய்... ... . *
நல்லாயிருக்குது - காணும் ... . ஒரு
சொல்லாலே இப்படிதோணும்... ... ... வெகு
உல்லாசமாவாயிலாக— — ...(இல்லல்லாகூவென்)

[சரணங்கள்]

அண்டப்புவனங்களென்றுமிருப்பதை— — — *
யாதென்றறியது... ... — தானே ... ... எங்கும்
நின்றுநிறைந்துமறைந்து சிறந்த ... — ..... *
நெடியதிராமயந் ... ...தானே — —முதல்
பண்டுபழகியநாட்டத்துக்கேயது... ... — — *
பாவைக்கூத்தானது ... தானே... ... .. நீ
கண்டுகளித்துச்சகலமும்விட்டுக்... ... ... *
கரையேறினால்நலந் ... தானே ... தான்
சென்றவிடஞ்செயந் ... தானே... ... தன்னைக்
கண்டுகொண்டிலாயிலாக... ... (இல்லல்லாகூவென்)

கெட்டமனத்தையுடையவெருமைக் — — — *
கிடாவினைப்போலவு ... முண்டோ — .. காசைக்
கட்டிப்புதைத்துக்கடைசியிற்சாகின்ற .... *
கழுதைகட்கும்பல ... னுண்டோ... ... ... சுத்த

ஈ அசமஸ்தான்சாகிபு அவர்கள்பாடல

மட்டிப்பயல்கள்மனத்தைக்கலக்க ... ... *
மருந்துகள்மாத்திரை ..... யுண்டோ - வெகு ...*
சட்டமதர்இயதிஷ்டையிராத ... ...*
சண்டாளர்க்குச்சாஸ்திர ... மூண்டோ - இந்தத் *
துஷ்டரைப்போலவு .. .. மூண்டோ - நீ *
கெட்டியுடன்லயிலாக .. ... (இல்லல்லாகூவென்)
இல்லல்லாகூவென்றேநானிராமல்..... ... ... *
இணைபடவுமிருந் .. தேனே - மெத்த ...*
நல்லநோன்புடன்றொழுகையும்விட்டு ... ...*
நலங்களையுமறந் — — தேனே - தன்னை *
வெல்லுங்குருபரன்-சொல்லியதினைக்கூ ... ... *
வினவாமல்விட்டிருந் ... தேனே - அதை ... *
அல்லும்பகலுமறியாமலென்னுள்ளே — — ... *
ஆபாசமாக்குவித் ... தேனே - இது *
எல்லாமதிந்திடுந் ... ...தானே - சொல்லுஞ் *
சொல்லுஞ்சொல்லும்லாயிலாக ... (இல்லல்லாகூவென்)
பூசைகள்செய்கிறேனென்றுதிரிந்து ... —
புலம்பியபாபமும் ... போக்கி - பெண்கள் *
ஆசையினாலேயனேகந்தரங்கள் — ... . *
அடிபட்டதும்லனு .. .. வாக்கி - எங்கள் *
ஈசன்திருவடி-யாசையுள்ளார்னபின் ... .*
என்னைக்கையாலவர் ... தூக்கி - அந்தத் ...*
தோஷித்தனங்கடொலையத்தொழுநற் ... ... *
றுறைகளைப்போதனை ... யாக்கி - கெட்ட ...*
பாசங்களைவிட்டு... ... நீக்கி - தந்த ... *
வாசியுடன்லாயிலாக... ... . (இல்லல்லாகூவென்)
என்சாணுபரத்திருக்கும்பணங்க — — — — *
விதக்கியுண்ணேன்மனக் ... கண்ணே - கெட்ட *
கஞ்சாவுங்கள்ளுநபாரக்குமபினும் ... ... *
கலப்பதைவிடுவெறு ... மண்ணே - நீ *
தஞ்சா ஊராருமகாராஜன்பாதத் ... ... — *
தணிந்துநமஸ்க்காரம் ... பண்ணே - என்றன் *
கொஞ்சப்பெலனுள்ள-சாயாடரிடென்ற — ... *
கோட்டையிடித்திடு — மெண்மீண - அவர் ... *

அஞ்சாதிடிப்பனென் ... .றென்னை-இனிக் ... *
கொஞ்சிக்கொஞ்சிலாயிலாக... ... ...(இலலல்லாகூவென்
என்னவிதமென்றுசொல்வேன்மூழக்க .. ..*
மூழங்குந்தென்னுக்குள் ... .ள்ளலே - ஒரு... *
அன்னமிருந்தேமழுகுயிறக்க... ... ... *
அசைந்தசைந்தாடுவ் ... ...தாலே - அதன்— ...*
மூன்றலையாய்செய்த-பாக்கியங்கண்டு .. — — — *
மூன்றுகசயில்லாத... ... தாலே - அது ... — ...*
நன்றலையர்தந்த-வெள்ளம்பெருகித் — ... ... *
நடையறப்பாயுத்— ... . லாலே - பயிர் ... ...*
அன்னம்பிடிப்பத ... ... றுமேல - உனக் ... ...*
சென்னகுறைலாயில்ாத... .... (இல்லல்லாகூவென்)
வாசனையாகியமாசத்தவஸ்த்துவும்... ... . *
வாக்குமனத்துக்... ... ...கெட்டாதே - அதில்... ...*
ஆசைக்கடல்பொங்கியோங்சயுடனலே ... .*
ஆடம்பொன்னுக்... ... கட்டாதே - இந்த...*
நாசச்சரீரத்தை-வாங்கியிந்நீட்டிடில்... ... ... —*
நாசத்தைபண்ட ... ... வொட்டாதே - நல்ல... *
யோசனைசெய்யுங்-குணங்குடிவந்திடில்... ... ...*
யோகமுனக்குக்... ... குன்றுதே - ஒரு ... ... *
மாசறயாகூவென் ... ...ன்றுதே - காசில் ... *
ஆசைவிட்டேலாயிலாக... ... ...*

இல்லல்லாகூவென்றென்னைமறந்துகொள்ள
இருப்பாயென்னெஞ்சமே... ... ...(௨)

முற்றிற்று

தரு - இராகம் - பந்துவராளி - சாப்புதாளம்

பல்லவி

பெண்கொண்டபேர்பட்டபாட்டையுங்கேட்டையும்
பேசுவோமேநெஞ்சமே...... ... ... *

அநுபல்லவி

சங்கையும்போக்கிச் சதிமானமாகச்... ..... *
சகசண்டியாக்குவித்திடுவாள்... ... வெகு

ஸ்ரீ அ/சு மஸ்தான்சாகிபு அவர்கள்பாடல்

பங்கப்படுத்திவிட்டிடுவாள் ... ... அந்த
மங்கையராசைவைத்தையையோவையத்தில்...(பெண்கொண்ட)

[சரணங்கள்]

தங்கைநகையுமுகட்டணிச்சேலையுந் ... ...*
தாசெனவேசுரங்காட்டுவாள்... ... ... என்றன்
செங்கையையுந்தலைக்கென்னெட்சீட்புஞ் ... . *
சிறப்பொடுதலையெனமாட்டுவாள்... ... ... — ...வன்னக்
கொங்கைக்கிசைந்தரவிக்கையுங்கோலப்...... ... ...*
பணியுங்கொடுவெனமூட்டுவாள் ....அட
வெங்கப்பயனீயெனுமக்களுவென்று ... ... *
வீட்டில்வராதேயென்றோட்டுவாள்... ... ... வெகு
பங்கப்பழிப்பிணிநூட்டுவாள் .... — அந்த
மங்கையராசைவைத்தையையோவையத்தில் (பெண்கொண்ட)

ஆதியைத்தேடியருள்பெறநாடில்... ... ...*
அழுதழுதமடிபிடிப்பாள் ... ... நீதான்
ஏதென்னைவிட்டுப்பிரிவதுமென்றவள்... .... *
ஏங்கியேங்கிதுடி துடிப்பாள் ... ... — இன்னும்
வாதாநீசெய்யுந்தவம்பலியாதென... ... ... —*
வாழ்த்திவசைகொண்டகொடுப்பாள்... ... ... கெட்ட
மூதேவிபுத்திபடைத்தவளாகி... ... ... *
பூரணுக்குமாறடி துடிப்பாள்... ... ... வெகு
வேதனையாய்மடமடப்பாள்... ... ... அந்த
மாதிகளாசைவைத்தையையோவையத்தில் ... (பெண்கொண்ட)

நாடிக்குருவடிதேடி நடக்கின்ற .. .. *
நற்செயலைக்கசப்பாக்குவாள்... ... ... எங்கும்
ஓடித்திரிந்தேயலைந் தபணங்கள்ள்... — ... ... *
ஒருக்காலேவதேடென் றுதாக்குவாள் ... ... அவன்
ம்தடும்பொருடனேக்காணிலுமக்கெதிர் ... ... *
தேசத்திலாவென் றுதூக்குவாள் ... ... இன்னும்
ஆடென் றும்மாடென் றும்வீடென் றந்தேடென்றும்... ...*
ஆண்டவனைமறப்பாக்குவாள் ... ... — பின்பு
ஈடொன்றிலாநினையாக்குவாள்... ... ... அந்த
ஏழைகளாசைவைத்தையையோவையத்தில்... (பெண்கொண்ட)

நீராட்டமாடிமையிட்டுப்பொட்டிட்டு... ... ... *
நிரம்பவுடைமைகளிடுவாள் .. .. வந்து
போராட்டமாகவேசீராட்டஞ்செய்துன்றன் —... ... ... *
புத்தியைப்போக்கடித்திடுவாள் .. .. இன்பு
பாராட்டம்பண்ணிபுன்றன்னையும்விட்டுப்... ... ... *
பலர்முகம்பார்த்தவள்கெடுவாள் ... ... சூதக்
மாராட்டமாகுமனத்தெளிபார்க்கு ... ... *
மருண்டமழையேபொழிந்திடுவாள் .. .. கெட்ட
சீராட்டியாய்வத்துமுடிவாள் ... ... அந்த
நாரிகள்சலைவத்தையையோலவயத்தில்... ... — *

பெண்கொண்டபேர்பட்டபாட்டையுங்கேட்டையும் *
பேசுவோமே நெஞ்சமே— — — *

முற்றிற்று

ஆசிரியவிருத்தம்

பாடையிலேதுறவடைர்துபாமடைந்த- - — *
குணக்குடியார்பகர்ந்தஞானம் - - - *
பாடையிலேதுறவடைந்துயரமடைந்தா - - *
னந்தசுகம்படைத்திடாமைப் - - - *
பாடையிலேபோட்டுபிடுகாட்டிவிடப் - - *
படுமுன்னையும்பலருமந்தப் - - - *
பாடையிலேபோட்டெடுக்கநாள்வருமென் - - *
றறிந்திலையேபாவிநெஞ்சே - - (௧)

தரு - இராகம் கல்யாணி - சாப்புதாளம்

பல்லவி

எத்தனைபாட்டநீயாடினும்பதைப்பந்
திருந்திடுவாய்நெஞ்சமே — *

அநுபல்லவி

புத்திசற்றேனும்படைத்தாயெனிலந்தப் - - *
போதனையேயுனைத் — தேற்றும் - மூன்று
வாதனைமுமற — மாற்றும் — மேயாக
சாதனைமீதிலு — மேற்றும் — (எத்தனை)

ஈஅஅமஸ்தான்சாகிபுஅவர்கள்பாடல்

[சரணங்கள்,]

நற்றவஞ்சித்திக்குமுத்திதருந்தச ... ...*
நாதத்தையுஞ்சுத்தியாக்கும் — ... ... — கட்டிச்
சுற்றமறுகிலக்கட்டுமவிழ்ந்திடச் ... ...*
சோடசப்பின்னலைநீக்கும் — ... ... — பாயும்
பத்தோடிரண்டுகலையுமெட்டாகப்... ... ...*
பராபரமும்முகம்பார்க்கும்... ... ... நல்ல
சுத்தமயப்படிகச்சுயஞ்சோதிச் ... ... *
சுழிமுனையுந்தலைகாக்கும் ... ... — ... எமன்
உதைக்கும்யாகத்தனைப்போக்கும் ... ... வந்து
வெற்றிகுணக்குடிவாய்க்கும்... ... ...(எத்தனை)
சற்பசுதன்னைவெளியில்விடாமலும்... ... ... *
கட்டிதொழுவினின்மாட்டும் ... ...வீட்டிற்
பாற்பசுவைப்பக்குவத்துடன்வைத்ததன் ... ... *
பாலைக்கறந்துணக்கூட்டும் — . ஏழை
போர்ப்பசிதன்னையும்போக்கித்தபசுக்குப் — *
போவென்னநேர்வழிகாட்டும் — — அதன்
மேலுப்படைக்காலுவுதைத்துவுதைத்தினும் — *
விட்டேனோவென்றாசைதீட்டும் — — உன்றன்
மார்ப்பழபாலையுஞ்சாட்டும் — — மேட்டை
மெய்ப்பக்குணக்குடியோட்டும் — (எத்தனை)
வஞ்சமலிவரவிகாரான — — — *
வஞ்சியராசைவிட்டோடும் — - — — மெத்தப்
விஞ்சுபழங்கந்தையாலயுன்மாலையைப் — — — — *
பேயர்கலைபினிப்போடும் — — — — — நாளும்
தஞ்சமென்றென்குருநாதன்திருவடி *
தன்னைத்தொழுதிடநாடும் - - - இனி
என்செயலேதுமிலையென்றவரிடம் - - -*
ஏங்கியேங்கிரையப்பாடும் - - - நின்று
அஞ்சாமலஞ்சியேவாடும் — - - - மிக்க
கெஞ்சிக்குணங்குடிதேடும் - - - (எத்தனை)
இடைபிங்கலைக்கிடையில்வடையுஞ்சுழி - *
எளிதிற்றடையறமீறும் - - - - பாயு
மடைகண்டுவருமதியமுகமூட்கொண்டு — - -*
வரவரக்காயமுற்தேறும் - - - இற்ற

உடலோடிருந்துதவஞ்செய்யவுங்கற்பம் ... ... *
உண்டெடமகண்டருமாறும்... ... ... பின்பு
குடங்கவிழ்நீரொல்லநீசெப்பவங்களுங்... ... ... *
கொட்டுண்டுமேன்பீருசாறும் ... ...முன்னைத்
தொட்டிருவினைவெந்துநீரும் ... ... அருள்
படருங்குணங்குடியேறும் .... (எத்தனை)
ஆதாரமாதினுஞ்சேதாரம்வாரா ... ...*
தடுக்கடுக்காகவேவிளக்கும் ... ... எமன்
பாதையார்த்துநிற்குங்கண்டமெனுமயிர்ப் .... *
பாலத்தையுமேன்னக்கடக்கும்... ... ... பின்பு
காதுகண்ணுக்கொளிமூக்குமொன்றாகச் ... ... *
கயிற்றுடித்நாளத்தைபடக்கும் .... என்றுஞ்
சூரணமாகியவெட்டவெளிசென்று ... ... *
சொக்கிமயக்குண்டுபடுக்கும் ... ... குரு
நாதனருளடைகிடைக்கும் .... பரஞ்
சோதிகுணங்குடியடுக்கும் ... ...(எத்தனை)
உந்தியில்நின்றுதித்தசுழிமுனை ... ...*
ஓங்காரக்கோதண்டம்பிடிக்கும் ... ...வரும்
சந்திரன்சூரியன்மேல்வைத்துத்தாக்கிச் ... ... *
சமர்பொருதுஜெயம்படைக்குஞ் ... ... சந்தோ
தூந்திருந்தினைப்பாரிதெளிந்து ... ... *
குசாலாகச்சாய்ந்தங்கேபடுக்கும் ... ...அதந்
தந்தியுஞ்சத்தியுமச்சிறுக்காலமும்... ... ... *
ஆசரித்துப்பூசைநடக்கும் ... ... தேவ
இந்திரன்போனின்றுநடிக்கும் ... — ... ... இங்கே
வந்துகுணங்குடிகொடுக்கும் ... .(எத்தனை)
சொல்லிக்கிரிதத்தவிவகற்றமேதாஷி ... ... *
தோஷித்தைநாசத்திலாக்குங் ... ... சுற்றும்
நல்லவழிவத்துபுலையனைக்காண்கி ... ... *
னடுக்கியடவெங்கும்வேர்க்கும்... — ... ... மங்க
செல்விவெளிபிடித்ததைபோந்காசுக்... ... ... *
கேயுலையாதனைக்காக்கும் ... ... யாயும்
வல்லயம்போல்வருமாயையாஞ்சண்டி ... ... *
மாட்டுக்குமாசண்டியாக்கும்... ... ...குரு

[illegible] மஸ்தான்சாகிபுஅவர்கள்பாடல்

நெல்லிக்கனிகைக்குள்வாய்க்கும் ... ... அருள்
முல்லைக்குணங்குடிபூக்கும் ... ... (எத்தனை)

காமக்குரோதக்கலைகளைச்சளைந்து ... ... *
கடுஞ்சுழிக்காற்றிலேதூற்றும் ... ... யோக
பூமிக்குள்மோனவித்தைப்பதித்துப்பயி ... ... *
பூரணமாய்ப்பயிரேற்றும் ... ... மேற்
சோமன்மதிவட்டமீதுசுழிமுனைச் ... ... *
சொக்கித்தெளிந்திடத்தேற்றும் ... ... தாயை
வாமம்வைத்துப்பூசைப்பண்ணிப்பணிந்திட ... ... *
வாரியமிர்தத்தையூற்றும் ... ... நல்ல
நேமத்துடனுனைப்பார்க்கும் ... ... என்றுஞ்
சேமக்குணங்குடியேற்று ... ...(எத்தனை)

இல்லந்துறந்துவரும்பலதொல்லைகள் ... ... *
எல்லாமெடுத்தெடுத்தெறியும் ... ... மூடும்
வல்லிருளாகியமாமாயைத்தந்த ... ... *
மயக்கும்விட்டுவிட்டுப்புரியும் ... ... ஒரு
எல்லையிற்பேரின்பவெள்ளப்பெருக்கில் ... ... *
எடுத்துண்டுதன்வயினிறையும் ... ... பின்பு
அல்லும்பகலுஞ்சுகானந்தநிஷ்டையில் ... ...*
அண்டமும்பிண்டமுந்தெரியும் ... ... எங்கும்
சொல்லுமருண்மழைசொரியும் ... ... மெத்த
நல்லகுணங்குடிபுரியும் ... ... (எத்தனை)

கூசிக்குலர்வுமடவாரைக்கொஞ்சிக் ... ... *
குலாவாமலுங்கையைவிடுக்கும் ... ... வன
வாசத்துக்கேகித்தவம்புரிதற்கிச்சை ... ... *
வைத்துவைத்துத்துடிதுடிக்கும் — — — கெட்ட
ஆசைப்பசாசைத்துரத்தித்துரத்திவந் — — —*
தண்டவொட்டாமலேபடிக்கும் — — ஞான
தேசிகன்பாதாரவிந்தத்தையேமோனச் — — —*
சின்முத்திரையாகப்பிடிக்கும் — — — *
தேசத்துக்காரைப்பத்தடிக்கும் — — — நமக்
சேன்குணங்குடிகிடைக்கும் — — (எத்தனை)

செத்தாலும்வைத்தடிவாங்காமனிற்கின்ற — — *
    தீரத்தையேதிறமாக்கும் — — — சற்றும்
மெத்தாதிபுத்திவந்தெற்றுமனுன்றனை — — *
    மேவிவிழுந்துலைதூக்கும் — — — எங்கள்
சித்தாதிகட்கருள்செய்தநன்முத்தியுஞ் — — ●
    சித்தியும்வெற்றியும்வாய்க்கும் — — — நின்று
எத்தாலினிப்பிழைப்போமெனவெண்ணாமல் — — *
    எங்கோனருட்பாதுகாக்கும் — — —ஒரு
வித்தபவங்களைப்போக்கும் — — — — மோன
    வித்தைகுணங்குடிவர்க்கும் — ... (எத்தனை)
எண்ணாதவெண்ணத்திலூடேபடர்ந்தெழும் — — *
    இன்பவிநோதத்தைவீட்டும் — — —கெட்ட
மண்ணானமூவாசைமண்ணுவுதல்ல ... — — *
    மாணுபிமானத்தையோட்டும் — — — என்றன்
கண்ணேமணியேயென்கண்ணுதலேயெனக் — — —*
    கண்ணீருமுன்னீருமூட்டும் — — — பின்பு
தண்ணீருமண்ணுங்கலந்ததுபோற்சிந்தை — — —*
    தத்தளிக்காநிலைநாட்டும்... — — ... ...நடம்
கண்ணும்பரவொளிசூட்டும் - - - - . உய்யும்
    வண்ணக்குணங்குடிகாட்டும் - - - (எத்தனை)
வித்தகனார்சொன்னபுத்திபுன்மாயையை - - *
    வேங்கைப்புலியெனச்சாடும் - - - தம்மை
வெற்றிகொண்மாதர்மயக்களற்கேணி - - *
    விரிவோடவுங்காசைப்போடும் - - உன்னைப்
பெற்றார்பிறந்தார்சுற்றத்தார்முதலான - - *
    பித்தர்க்கெல்லாமுகம்வாடும் - - நல்ல
பத்தரைமாற்றுப்பசும்பொன்னையொத்த - - ●
    பரவொளிபம்பரமாடும் - - - மேலுஞ்
சத்தனருளுங்கைகூடும் - - - நாளுஞ்
    சித்தக்குணங்குடியாடும் - - - (எத்தனை)
எங்குநிறைந்தபெரும்பொருளென்னுள் - - *
    இருந்துகொண்டேவிளையாடும் - - ஒரு
கங்குகரையறப்பொங்கிப்பரவிக் - - - ●
    கருணைக்கடல்வந்துமூடும் - - - - அருந்

வங்கரூந்தங்காமலிங்குலந்தென்னை - - - *
மகிழ்ந்தெடுத்தேந்திக்கொண்டோமே - - நானும்
மங்காததங்கவெள்ளைப்பொருளு - - - *
மலைமலைப்பாக்கலைகூடுமே - - - இர்னும்
பங்குகொடுக்கவுநாமே - - - யோகத்
தங்குந்துணைக்குடிகூடுமே - - - (எத்தனை)

வாசாமகோசரவான்பொருளென்றன் - - *
மடிமீதுசெக்கிளையாடுமே- - - மோன
தேசிகன்பாதாரவிந்தந்தற்தெய்வத்தைத் - - *
தெய்யெனக்கூத்திடுவோமே - - எங்கள்
ஈசன்திருவருட்டாளுணைகொட்டிப்பேரி - - *
இன்பக்கோலாகலம்பாடுமே - - - ஊழ
பாசமறுத்துக்கொண்டென்னைச்சிமட்டமும் - - *
பாய்ந்துமடமடென்றோடுமே - - -கோட்டை
வாயிற்கடந்துட்சென்றாடுமே- - - மேலே
பேசுங்குணக்குடிகூடுமே - - *

எத்தனையாட்டாநீயடிஞம்புதைப்பற் ... ...*
திருந்திடுவாய்நெஞ்சமே ....(௪)

முற்றிற்று,

கொச்சகம்,

ஐயையோவென்கிளியைபாரிடத்திற்சொன்னாலும் ... ...*
ஐயையோவென்றேவழுங்கவலைகொள்வாராம் ... ... *
ஐயையோவைபகத்திலாருமில்லையுன்னையன்றி ... ...*
ஐயையோவடிமையைக்கைவிடணைப்பாய்குருபரனே... ...(உ)

தரு-இராகம்-பைரவி-சாப்புதாளம்,

பல்லவி,

ஐயையோநானென்செய்வேன்-என்விதிவசம்-*
ஆருடனேசொல்லிபழுவேன் - *

அநுபல்லவி.

மெய்யெடுத்ததும்பொய்யாய்வீணாட்கழித்துபோச்சு ... *
பொய்யிலாதவென்-னையருளது ... ... *
என்மெய்புயமாக்கண்ணீர்க்காமனே ... (ஐயையோ)

[சரணங்கள்]

பார்க்கப்பலவிதமறைவாய்-சமயமயலான ... — — — —*
பதினாலுலோகமுதிறைவாய்... — ... ...— ...,...— ...*
வாக்குமனமுமதினுக்கமதுவாய்நின்றார்... ... ...*
தீர்க்கமாயதியாமற்றேடியே— — — — .... — *
பார்க்குள்ளேயலைந்தலைந்திங்கானேனே... ... (ஐயையோ)
முன்னோர்செய்திடுபாவலாபமோ-பாதகமோவென்... ... *
மூதேவித்தனங்கொள்பிரதாபமோ — ... ... *
என்னகொடுமைகளோ-வென்றலைவிதிதானோ... — ...*
இன்னபேதமில்லாதசோதியை... ... ... *
இன்னுமென்னுட்-கண்ணிற்காணேனே ... ...(ஐயையோ)
ஆசாபாசங்களெல்லாத்தையும்விட்டும்-அனுதினமும் ... .. *
ஆனந்தவெள்ளத்துளகப்படும்... ... ...*
ஓசைமணிபூரகத்-துள்ளெங்குந்தேடியும் ... .*
வாசமொய்த்தகுணங்குடிப்பர... ... ...*
தேசியெய்த்தமிளைத்துங்காணேனே ....(ஐயையோ)

ஐயையோநானென்னசெய்வேன்-என்விதிவசம்
